**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண். 05/2025 ல்**

**அசல் வழக்கு எண்.305/2020**

K. சசி ரேகா,
க/பெ. குமரவேல்,
4/115A, 4/176, 4 வது தெரு,
திருநகர், கள்ளக்குறிச்சி,
திருச்சி – 4. ... மனுதாரர் / பிரதிவாதி

/எதிர் /

C. அசோக்,
த/பெ. செல்லப்பா,
TA உட்ஸ் அப்பார்ட்மெண்ட்,
அண்ணா நகர்,
திருச்சி – 17. ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவானது, கடந்த 12.01.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.A. வாசுதேவன் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. D.கேசவன் அவர்களும் முன்னிலையாகியும், மனுவை நடத்த, மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**உத்தரவு**

1) மனுதாரர் தரப்பில் வகுமுறை 8 விதி 1(3) மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பு மனுவை ஏற்றுக் கொண்டு, மனுதாரர் தரப்பில் மனுவில் கண்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்வதற்காக உத்தரவிட வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் அசல் மனுவின் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கெதிராக தொகையை வசூலித்து தரக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்குரையில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் பொய்யானவை என்றும், இந்த மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கிற்கு தொடர்புடைய தேவையான முக்கிய ஆவணங்கள் என்றும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பினை நிரூபிக்க இந்த ஆவணங்கள் மிகவும் முக்கியமானவை என்றும், எனவே, மேற்படி ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

3) எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த மனுவில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இதர

சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், இந்த மனுவில் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியாக தயார் செய்யப்பட்ட ஒன்றாகும். மேற்படி ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. அதுமட்டுமின்றி மேற்படி ஆவணங்களை இந்த வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்துள்ள காரணத்தினால், மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று என்றும், மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் குறிப்பாக மூன்றாவதாக குறிப்பிடப்பட்டுள்ள ஆவணமானது சாட்சிய சட்டத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வங்கிக் கணக்கு விவரங்களானது போலியாக தயார் செய்யப்பட்டது என்றும், கடந்த 08.07.2024–ம் தேதியன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு கொடுத்ததாக மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது வழக்கிற்கு பின்னிட்டே ஏற்படுத்தப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணமானது வழக்கின் உண்மையான சங்கதிகளை மறைக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணமாகும் என்றும், மேற்படி ஆவணங்களை இந்த எதிர்மனுதாரர் மறுப்பதாகவும், மேற்படி மூன்று ஆவணங்களையும் உருவாக்கிய நபர்கள் இந்த மனுவில் மனுதாரராக இல்லாத காரணத்தினால், மேற்படி ஆவணங்களானது புதிய தரப்பினர்கள் வழிதான் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். மேற்படி ஆவணங்களை வழக்கிற்காக மனுதாரரே உருவாக்கி தாக்கல் செய்துள்ளதாகவும், உரிய தரப்பினர்களினால் தாக்கல் செய்யப்படாத நிலையில், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய இயலாது என்றும், எனவே,

இந்த மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமெனவும் வாதிடப்பட்டது.

4) இந்த இரு மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்ககாவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/பிரதிவாதிக்கெதிராக எதிர்மனுதாரர்/வாதியால் தொகையை வசூலிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்புடைய முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்கள் மனுதாரரின் அசல் வழக்கினை நிரூபிக்க அவசியமான ஆவணங்கள் என்றும், மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

6) இந்த மனுவுடன் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 1) 08.07.2024 – Reply received through RTI-complaint copy of defendant, summon and information. 2) 11.07.2024 – Bank statement of defendant. 3) Pendrive. மற்றும் அதற்கான BSA சட்டம்பிரிவு 63(4)(c) ன் கீழான சான்று ஆகிய 3 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) விசாரணை நீதிமன்றத்தில், இருதரப்பினருக்கும் அவர்களது வழக்கை நிரூபிக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது, எனவே, அசல் வழக்கில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பை நிரூபணம் செய்ய அவரது தரப்பில்

கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய ஒரு வாய்ப்பு வழங்குவதே, நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி கூடுதல் ஆவணங்களின் உண்மைதன்மை, கட்டுப்படுத்தும் தன்மை தொடர்பாக அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும். எனவே, இந்த மனு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

8) **முடிவாக,**

இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

மனுவில் கூறப்பட்டுள்ள ஆவணங்களின் உண்மை தன்மை மற்றும் கட்டுப்படுத்தும் தன்மை தொடர்பாக, அசல் வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும் என முடிவு செய்து, அவற்றை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், எதிர்மனுதாரர்/வாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது. மனு செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN
Date: 2026.01.27 16:14:53 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி**

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2026.01.27 16:14:59 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**